'ஒன் மேன் ஆர்மீ' கமல்ஹாசன்; 'ஒன் மேன் ஷோ' ஷங்கர்: ரசிகர்கள் எதிர்பார்த்துப் போனால் (ஏ) மாற்றமில்லை – 'லைக்' ✓ கா?

★ எரிமலையாய் வெடித்துச் சிதறும் சித்தார்த் – சூப்பர்!
★ ஏற்ற கேரெக்டரில் குறை சொல்ல முடியுமா? பாபி சிம்ஹா!

A Shankar Film என்று போட்டிருக்கிறார்கள் எழுத்து வரும் நேரத்தில்.

A Shankar & Kamal Film என்று போட்டிருந்தால் –

'Lyka'வுக்கு ஒரு Like கொடுத்திருப்பேன்.

காரணம் – 'இந்தியன் – 2', மீண்டும் சொல்கிறேன்: இது ஒரு கை ஓசையல்ல ஷங்கர் – கமல் இருவருமே இணைந்த கைகள் இருகை ஓசை என்பதை மீண்டும் மீண்டும் ஊர்ஜிதப்படுத்தவே விரும்புகிறேன்.

பணத்தைத் தண்ணீராய்... தண்ணீராய் செலவழித்து எடுத்திருப்பதற்கு ஷங்கருக்கும் கமலுக்கும் ஒரு 'லைகா' கிடைத்திருப்பது என்பது அது இறைவன் கொடுத்த வரம் (கமலுக்கு இறைவன் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். செய்யும் தொழிலே தெய்வம் என்று மாற்றி வேண்டுமானால் சொல்கிறேன்)

ஊழலை எதிர்த்து – ஊழல் பேர்வழிகளை ஒழித்து கமல் (சேனாபதி) நடத்தும் 2ம் தர்மயுத்தம், 'இந்தியன் – 2'

இது, இதோடு நிற்கவில்லை, பாகம் 3 என்று இந்தியன் 3–க்கும் தொடரவிருக்கிறதே... (வாயில் போட்டு சுவைக்கும் பப்பிள்கம்மை சுவைத்து சுவைத்து நுனி நாக்கில் உதட்டு ஓரத்தில் வைத்து சின்ன முட்டையை உருவாக்கி, அதை உடைத்து மீண்டும் பழையபடியே வாயில் நுழைத்து சுவைப்பதைப் போல)

'இந்தியன்' இல்லை... தாத்தா சேனாதிபதி – பான் 'இந்தியன்' என்று ஒரு அடைமொழியையும் உரக்கச் சொல்லி இருக்கிறார்கள், ஒரு காட்சியில்:

'கட்டப்பாவைக் (சத்யராஜ்) கொன்றது யார்?' என்று எழுந்து வரும் நேரத்தில் பாகுபலியில் கேள்வியை எழுப்பி, பாகுபலி–2க்கு பிரம்மாண்ட நாயகன் இயக்குனர் ராஜமவுலி ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கியதைப் போலவே–

குற்றுயிரும் குலைஉயிருமாகக் கிடக்கும் போலீஸ் அதிகாரி பாபி சிம்காவை பிழைக்க வைக்க ஆம்புலன்சில் கொண்டு செல்லும் இந்தியன் தாத்தா சேனாபதியைக் காட்டி... அடுத்து என்ன என்பதை 'இந்தியன்–3' திரையில் சொல்லும் என்று முடித்திருக்கிறார்கள் – ரசிகர்களுக்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்க வேண்டும் என்பதற்காக. கணக்கு வழக்கு இல்லாமல் பணத்தைக் கொட்டியிருக்கிறார்கள், 'Lyka' (லைகா). ஒரு எதிர்ப்பார்பபோடு நடையைக் கட்ட வைத்திருக்கிறார்களே ஷங்கர் & கோ, குவிந்திருக்குமா அவல்களுக்கு ' Like'ஆ? (லைக்கா).

'வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்கிறார்கள்.

வீட்டுக்கு ஒரு களை எடுப்போம்...'

ஊழல் பேர்வழிகள் நம் வீட்டில் இருந்தாலும் அது தாயோ, தந்தையோ, மகனோ, மகளோ, தம்பியோ, அண்ணனோ தயவு தாட்சண்யம் கூடாது. நான் என் மகனைக் கொல்லவில்லையா...? என்று ஊழலை ஒழிக்க – 2வது சுதந்திரப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்து,

குரைக்கும் நாய்கள்' (BARKING DOGS) என்ற பெயரில் சோஷியல் மீடியாவில் (சமூக ஊடகம்) சமூகத்தில் நடக்கும் அநியாயம் – அக்கிரமம் – அசிகங்கத்தைத் தோலுரிக்கும் சித்தார்த் – ஜெகன் – ரகுல் ப்ரீத்தி சிங் – ப்ரியா பவானி சங்கர் ஆகிய நால்வர் கூட்டணியை உசுப்பிவிடும் சேனாபதி (கமல்). அதை வேதவாக்காக எடுத்துக் கொண்டு களமிறங்கும் நால்வர் அணி, தன் வீட்டில் இருக்கும் ஊழல் பேர்வழிகளையே சட்டத்தின் முன் கொண்டு நிறுத்தும் 'சென்டிமெண்ட்' பிற்பாதியில் தான் கதையே சூடு பிடிக்கிறது.

எந்த இந்தியன் தாத்தா வர வேண்டும் Come Back என்று கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை இருக்கும் இளைஞர் பட்டாளம்– பொதுஜனம் சமூக ஊடகம் மூலம் அழைப்பு விடுத்ததோ – அதே சமூக ஊடகம் இளைஞர் பட்டாளம் Go Back என்று இந்தியன் தாத்தாவை நிராகரிக்கும் மர்மம் தான் என்ன என்பதே – இடைவேளைக்குப் பின், க்ளைமாக்சுக்கு முன் – திரைக்கதை.

படம் 11 மணிக்கு ஓட ஆரம்பிக்கிறது. எண்ணி 35 நிமிடங்கள் கழித்தே தான் கமலின் (இந்தியன் தாத்தா – வெளிநாட்டில் தஞ்சம்) அறிமுகம் திரையில் அது வரைக்கும் சமூக ஊடகத்தில் யுடியூப் சேனலில் சமூக அலவங்களைத் தோலுரித்துக் கிண்டலடிக்கும் சித்தார்த் – ஜெகன் – ரகுல் ப்ரீத்தி சிங், ப்ரியா பவானி சங்கர் – நால்வர் கூட்டணியின் அளப்பறை தான், 35 நிமிடமும். (இது ஷங்கர் ஸ்டைல்)

ஒன் மேன் ஆர்மீ – அது தான் சேனாபதி, இந்தியன் தாத்தா கமல். 3 மணி நேரப் படத்தில் 100 நிமிடத்துக்கு தன் தோள்களில் நிறுத்தியிருக்கிறார். வெற்றிக் கோட்டில் (எக்காலத்திலும் நிற்பது போல) நின்றிருக்கிறார்.

ஊழல்வாதிகளை எதிர்ப்பது, எதிரிகளைப் பந்தாடுவது, எதிர்த்தவனைக் கதறக் கதற விட்டு கரைந்து போகச் செய்வது, அடிக்கும் வர்மக்கலை அடியில் அவன் உருத் தெரியாமல் மரணத்தை முத்தமிடுவது...

க்ளைமாக்சில் சென்னைக்குப் புதியதாக அறிமுகமான மெட்ரோ ரெயிலிலேயே யூனி சைக்கிள்– ஒற்றைக்கால்ச் சக்கர சைக்கிளில் பெட்டிக்குள் வட்டமிட்டு பாபிசிம்கா – போலீஸ் பட்டாளத்தையே கதி கலங்கடிப்பது...

என்று கமலின் அதிரடி ஆக்சனில் விஸ்வரூபம். (ஆனால்... முகத்தில் ஓல்டு கெட்டப் மேக்கப் ஏறியதால் உணர்ச்சி கொப்பளிக்கும் ஆக்சன், ரீயாக்சன்...?)

★ ஊழல் ஆசாமிகள் டெல்லி கணேஷுக்கான வர்மக்கலை அடியில் அவர் பக்கவாதம் பாதிக்கப்பட்டு – சாகும்வரை பாடிக் கொண்டே இருப்பது...

★ வைர நகை வியாபாரியை வர்மக்கலை அடிக்கு குதிரை மாதிரி ஓடிக்கொண்டே மரணத்தைத் தழுவ வைப்பது...

செவ்வாய் கிரகத்தில் வீடு வாங்கும் உத்தேசத்தில் இருக்கும் (ரூ.12000 கோடி அரசு பணம் கபளீகரம் செய்தவன்) ஊழல் கோடீசுவரனை, அந்தரத்தில் மிதந்து மிதந்து (ஜீரோ கிராவிட்டி) அடித்து உதைத்து உடம்பில் இருக்கும் தண்ணீர் முழுவதும் வெளியேறி மரிப்பது...

இப்படி அனுபவம் புதுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக புதிய கோணத்தில் கிரகித்து அதற்காக பிரம்மாண்ட பிரம்மாண்ட அரங்குகளை நிர்மாணித்திருக்கிறார், ஷங்கர்! (அடி... ஆத்தாடி... என்னமாய் ஒரு காட்சி அரங்கம்)

'அந்நியன்' படத்தின் சாயல் அங்கே விழுகிறது. அதே மூளை தானே இந்தியனிலும் அங்கே கருடபுராண வரிகள் என்றால் இங்கே மராத்திய மொழியில் எழுதிய வாசகங்களுக்கு தமிழில் விளக்கம். உதாரணம்

செங்குருதியில் கொழுத்தவனுக்கு செவ்வாய் கிரகத்தில் இடம் எதற்கு?

வெளிநாட்டில் அறிமுகக் காட்சியில்... அதனையடுத்து ஷாங்காயிலிருந்து புறப்பட்டு போலி பாஸ்போர்ட்டில் சென்னை விமான நிலையம் வந்திறங்கும் அறிமுகக் காட்சியில் அடையாளம் தெரியாத கிழட்டு தாத்தாவாக. குரல் தான் கமல் என்று கத்தி சொல்ல வைக்கும், நமக்கு அடையாளம் காட்டும்!

நடுக்கடல் – சொகுசுக் கப்பல், ஹெலிகாப்டர். ஒரு டஜன் வாழைத் தண்டு உடல் அழகிகள். – மெழுகு வார்த்து போல பளபளக்கும் தோல் – அரை குறை ஆடை தொப்புளில் ஊர்ந்து செல்லும் கைப்பிடியில் சிக்கும் குட்டி ஆமை... டீன்ஏஜ்களுக்கு கண்கொள்ளாக் காட்சிக்காக – ஒரு ஆட்டம், பாட்டம். அந்த

தாய் தற்கொலை செய்தி கேட்டு புழுவெனத் துடித்து வீட்டுக்குள் போகத் துடிக்கும் சித்தார்த்தை விரட்டியடிக்கும் மாரிமுத்து குடும்பம்... கடைசியில் சுடுகாட்டுக்குப் போயும் தாயின் முகம் பார்க்காமல் எரிமலையாய் வெடித்துச் சிதறும் சித்தார்த் நினைவைத் தொடும் நடிப்பில்.

பிரம்மாண்டமும் ஷங்கர் ஸ்டைல்.

சமுத்திரக்கனி நல்ல நடிகர். மகன் தந்தை பாசம். அரசு அதிகாரி – கடமை உணர்ச்சியில் கம்பீரம், ஊழலில் சிக்கி குமுறல்: நினைவைத் தொடுகிறார், நடிப்பில் 2ம் இடம். எஸ்.ஜே.சூரியா, விவேக், மனோபாலா, நெடுமுடிவேணு, ரேணுகா, தம்பிராமையா, இமான் அண்ணாச்சி – ஷங்கர் முகாமில், முகம் காட்டியிருக்கிறார்கள். கமல் படத்தில் இணைந்த பெருமைக்குரியவர்கள்.

காமெடி – ஊஹூம்.
டூயட் – ஊஹூம்...

'இந்தியன் தாத்தா வாராரு...' ஆயிரம் பேரைக் காட்டி படம் பிடித்திருக்கும் பாடல் – அனிருத் இசையில் மாஸ். இந்தப் பேரணி கும்பலும் ஷங்கரின் ஸ்டைல்.

ரவிவர்மன் காமிரா – ஷங்கரை ஒரு தோளில் உயர்த்தியது கமல். அது மாதிரியே இன்னொரு தோளில் உயர்த்தியிருப்பது ரவிவர்மன்.

'நீங்கள் எல்லாம் மகாத்மா காந்தி பாதையில் வாருங்கள். நான் நேதாஜி பாதையில் வருகிறேன். 'இனி நடக்கப் போவது 2ம் சுதந்திரப் போராட்டம்' என்று ஊழலை ஒழிக்க சூளுரைத்து சமூக ஊடகம் மூலம் இளைஞர் பட்டாளத்தைத் திரட்டும் கமலின் பின் புலத்தில் – பிரிட்டிஷ்லிருந்து விடுதலைக்கு இந்தியர்களின் தியாகத்தை விளக்கும் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், இதுவும் ஷங்கரின் ஸ்டைல்.

'கரப்ஷன் காசஸ் கான்சர். கேன்சர் கில்ஸ்': பொதுவாக சிகரெட், பீடி – புகைப்பதற்கு எதிராகப் போடும் விழிப்புணர்வு வாசகங்களைப் போல,

ஊழல் – புற்றுநோயை உண்டாக்கும். புற்றுநோய் ஆளைக் கொல்லும் என்று கமலின் குரலில் எச்சரிக்கை, விழிப்புணர்வை ஏற்படுத்தி, 'இந்தியன்–2' ஐ வெள்ளித்திரையில் ஓட விட்டிருக்கிறார்.

ஊழல் – சாகடிக்கிறது திரையில் (இந்தியன் – தாத்தாவை (கமல்) அந்நியன் அம்பி (சீயான் விக்ரம்) ஓவர் டேக் செய்கிறானே, ஓரிரு காட்சிகளில் நம் மனத்திரையில்!

லைகா நிறுவனத்தின் பிரம்மாண்டம்;
எதிர்பார்த்தபடி 'இந்தியன்–2'
ஓஹோவா... ஓகேவா?
ஓகே, ஓகே! (ஓகே–2)

– வீ.ராம்ஜீ

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதலேற்பு மனு எண். 347 / 2023

இந்திய வாரிசுரிமை சட்டம் XXXIX/1925 தொடர்பான மனுவில், 10.12.2016 அன்று இறந்து போன செல்வி ர.சந்திரா அவர்களின் சொத்துக்கள் தொடர்பான மனு

1.திரு. தே. ரமேஷ் பாபு, த/பெ. ஜே.தேவராஜன்
2.திரு. தே. ராஜேஷ் பாபு, த/பெ. ஜே.தேவராஜன்
மனுதாரர்கள் 1 மற்றும் 2 வசிப்பிடம்
புதிய எண்.9, பழைய எண்.4, பொன்னியம்மன் கோயில் தெரு,
கோட்டூர், சென்னை–600 085 .. மனுதாரர்கள்

vs

1. ர. ஜனார்த்தனம், மறைந்த ரகுபதியின் மகன்,
பழைய எண். 17, புதிய எண். 25, மண்ணப்ப தெரு,
கோட்டூர், சென்னை–600 085.
2. திருமதி. ஏ.பி. ஜெயந்தி, மறைந்த பத்மநாபன் மகள்,
பழைய எண்.3, புதிய எண்.5, பொன்னியம்மன் கோயில் தெரு,
கோட்டூர், சென்னை–600 085.
3. திருமதி.பொ.குணசுந்தரி, மறைந்த ர.பொன்னுரங்கத்தின் மனைவி,
4. திருமதி. சோ.ப்ரீத்தா,
எம். சோமசுந்தரத்தின் மனைவி,
5.பொ .ராஜ்மோகன், மறைந்த ர. பொன்னுரங்கத்தின் மகன்,
6.பொ .ரவிசங்கர், மறைந்த ர. பொன்னுரங்கத்தின் மகன்,
எதிர்மனுதாரர்கள் 3லிருந்து 6 வரை வசிப்பிடம்
பழைய எண். 18, புதிய எண் .27,
மண்ணப்ப தெரு,கோட்டூர், சென்னை–600 085.
7.திருமதி. ர. சூரியகுமாரி, கே..தாமோதரனின் மனைவி,
பழைய எண்.4–ஏ, புதிய எண்.7, பொன்னியம்மன் கோயில் தெரு,
கோட்டூர், சென்னை–600 085. .. எதிர்மனுதாரர்கள்

சென்னை – 600 085 கோட்டூர், ஆர்.எம் பிளாட்ஸ் நாயுடு தெரு, கதவு எண்.8/1, என்ற முகவரியில் வருத்து வந்து 10.12.2016 அன்று இறந்துபோன செல்வி ர.சந்திரா அவர்களின் சொத்துக்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும், தங்களுக்கு தக்கதெனக் கருதினால், நீதிமன்றம் நிர்வாகச் சான்றிதழ் வழங்குவதற்கு முன்பு, சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 05.08.2024 அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி மனு விசாரணையின் போது நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபனைகளைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இதன்மூலம் அறிவிக்கப்படுகிறார்கள் .

2024 ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 12 தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

S. கண்ணன்,
உதவிப் பதிவாளர்,
முதலேற்பு பிரிவு 1
சென்னை உயர்நீதிமன்றம்
சென்னை– 600 104

மு. கமலக்கண்ணன்
அபிராமி & யோகராஜ்
எண்.87, சட்ட அறைகள்,
சென்னை உயர்நீதிமன்றம்,
சென்னை–600 104

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB

CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை,
சென்னை- 600 058. தொ.பேசி எண். 044-4228 1100 இ-மெயில்: investor.relations@esab.co.in

அறிவிப்பு

வியாழக்கிழமை, 23 மே, 2024 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில், மார்ச் 31, 2024 அன்று முடிவடையும் ஆண்டிற்கு ஒவ்வொன்றும் ரூ.10/– மதிப்புள்ள ஈக்விட்டி பங்கிற்கு இறுதி ஈவுத்தொகையாக ரூ.30/–ஐ (அதாவது, 300%) பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பது இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. இது வியாழக்கிழமை, **8 ஆகஸ்ட் 2024** அன்று நடைபெறவிருக்கும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

ஈவுத்தொகை விவரங்கள்

ஈவுத்தொகை விகிதம்	ஒரு சமபங்கிற்கு ரூ.30
ஈவுத்தொகை உரிமைக்கான பதிவு தேதி	1 ஆகஸ்ட் 2024, வியாழக்கிழமை
ஈவுத்தொகை செலுத்துதல்	30 ஆகஸ்ட் 2024, வெள்ளிக்கிழமை

வருமான வரிச் சட்டம், 1961ன்படி, பங்குதாரர்களின் ஈவுத்தொகை வருமானம் வரிக்கு உட்பட்டது, மேலும் நிறுவனம் மேற்கூறிய ஈவுத்தொகையிலிருந்து பொருந்தக்கூடிய ஆதாரத்தில் வரியை (TDS) கழிக்கும்.

குடியுரிமை மற்றும் குடியுரிமை பெறாத பங்குதாரர் வகைகளுக்கான சட்டத்தின் கீழ், ஆதாரத்தில் பொருந்தக்கூடிய வரி விலக்கு (TDS) விதிகளின் விவரங்களை இந்தத் தகவல் வழங்குகிறது.

பூஜ்ய வரி அல்லது குறைக்கப்பட்ட வரி விகிதத்தைப் பெற விரும்பும் பங்குதாரர்கள்,பதிவாளரின் இணையதளம் https://www.integratedregistry.in/TaxExemptionRegistration.aspxல் தங்கள் கோரிக்கைக்கு ஆதரவாகத் தேவையான சான்றுகள் அல்லது ஆவணத்தை 4 ஆகஸ்ட் 2024 அன்று வணிக நேரம் முடிவதற்கு முன் பதிவேற்றம் செய்யமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஈவுத்தொகையின் மூலத்தில் வரி கழிக்கப்பட்டது மற்றும் படிவங்களை சமர்ப்பித்தல், பொருந்தும்:

A. குடியுரிமை பங்குதாரர்களுக்கு:
- வசிக்கும் பங்குதாரர்களால் செல்லுபடியாகும் நிரந்தர கணக்கு எண் (PAN) வழங்கப்பட்டால், செலுத்த வேண்டிய ஈவுத்தொகையின் மீது 10% TDS கழிக்கப்படும்.
- குடியுரிமைப் பங்குதாரர்கள் செலுத்த வேண்டிய டிவிடெண்ட் தொகையில் பொருந்தக்கூடிய விகிதத்தில் இரண்டு மடங்கு TDS கழிக்கப்படும்:
(i) PAN ஐ வழங்கவில்லை என்றால்; அல்லது
(ii) வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு 206ABன் கீழ் "குறிப்பிட்ட நபராக" கருதப்படுபவர்கள்.

இன்னும் தங்கள் PAN எண்ணை அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுக்கு வழங்காத பங்குதாரர்கள் உடனடியாக அவ்வாறு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எவ்வாறாயினும், செலுத்த வேண்டிய ஈவுத்தொகையிலிருந்து TDS கழிக்கப்படாது:

தனிப்பட்ட பங்குதாரர்கள், என்றால்:
- ஒரு நிதியாண்டில் நிறுவனம் செலுத்த வேண்டிய ஈவுத்தொகை தொகையானது, மொத்தமாக, 5,000/–க்கு மிகாமல் அல்லது
- அவர்களின் வருமானம் வரி விதிக்கக்கூடிய வரம்பிற்குக் குறைவாக உள்ளது மற்றும் பங்குதாரர்களிடமிருந்து படிவம் 15G (60 வயது வரையிலான தனிநபர்கள்) அல்லது படிவம் 15Hல் (60 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு) அறிவிப்பு பெறப்படுகிறது.
- இந்த படிவங்களை அதாவது. படிவம் 15G மற்றும்/அல்லது படிவம் 15Hஐ https://www.integratedregistry.in/TaxExemptionRegistration.aspx என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

குறிப்பிடப்பட்ட வடிவத்தின்படி விவரங்கள் மற்றும் ஆவணங்களை வழங்கும் கீழ்க்கண்ட குடியுரிமை அல்லாத தனிநபர்களுக்கு செலுத்த வேண்டிய ஈவுத்தொகைக்கு எந்த வரியும் கழிக்கப்படாது.

a) காப்பீட்டு நிறுவனங்கள்: அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் நன்மை பயக்கும் உரிமையாளர்கள் என்பதற்கான உறுதிமொழி மற்றும் செல்லுபடியாகும் IRDAI பதிவுச் சான்றிதழின் சுய சான்றொப்பமிடப்பட்ட நகலை சமர்ப்பிக்க வேண்டும்.
b) பரஸ்பர நிதிகள்: சட்டப் பிரிவு 10(23D)ன் விதிகளின்படி அவை நிர்வகிக்கப்படுகின்றன என்பதற்கான உறுதிமொழி மற்றும் செல்லுபடியாகும் செபி பதிவுச் சான்றிதழின் சுய சான்றளிக்கப்பட்ட நகலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
c) மாற்று முதலீட்டு நிதி (AIF) (இந்தியாவில் நிறுவப்பட்ட வகை I மற்றும் II): அதன் வருமானம் சட்டப் பிரிவு 10(23FBA)ன் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது மற்றும் அவை செபி விதிமுறைகளின் கீழ் வகை I அல்லது வகை II AIF என நிறுவப்பட்டது. பதிவு ஆவணங்களின் நகல் (சுய சான்றொப்பம்) வழங்கப்பட வேண்டும்.
d) TDS–லிருந்து விலக்கு பெறும் உரிமையுள்ள வேறு எந்த நிறுவனமும்: TDS விலக்கு பெறும் நிறுவனத்திற்கு ஆதரவாக, செல்லுபடியாகும் சுயசான்றளிக்கப்பட்ட ஆவணச் சான்றுகள் (எடுத்துக்காட்டு பதிவு, அறிவிப்பு, ஆணை போன்றவற்றின் தொடர்புடைய நகல்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

B. குடியுரிமை பெறாத பங்குதாரர்களுக்கு

வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு 195ன் விதிகளின்படி, குறிப்பிட்ட நபரின் இணக்கத்திற்கு உட்பட்டு நடைமுறையில் உள்ள விகிதங்களில் வரிகள் நிறுத்தப்பட வேண்டும்.

வெளிநாட்டு போர்ட்போலியோ முதலீட்டாளர்கள், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் பிற குடியுரிமை பெறாத பங்குதாரர்களுக்கு செலுத்த வேண்டிய டிவிடெண்ட் தொகையில் TDS @ 20% (கூடுதலாக பொருந்தக்கூடிய கூடுதல் கட்டணம் மற்றும் செஸ்) அல்லது வரி ஒப்பந்த விகிதம், எது குறைவாக இருந்தாலும் கழிக்கப்படும்.

வரி ஒப்பந்த விகிதத்தின் பலனைப் பெற, பங்குதாரர்கள் பின்வரும் ஆவணங்களை நிறுவனத்திடம் சமர்ப்பிக்க வேண்டும், அவை எல்லா வகையிலும் முழுமையாக இருக்க வேண்டும்:

1. பங்குதாரர் வசிக்கும் நாட்டின் வரி அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட வரி வதிவிடச் சான்றிதழின் (TRC) சுயசான்றளிக்கப்பட்ட நகல் (2024–25 நிதியாண்டிற்கு TRC செல்லுபடியாகும்)
2. இந்தப் படிவத்தில் தேவைப்படும் அனைத்து விவரங்களும் TRC ல் குறிப்பிடப்படவில்லை என்றால், பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின்படி படிவம் 10Fல் சுய அறிவிப்பு
3. இந்திய வருமான வரி அதிகாரிகளால் ஒதுக்கப்பட்ட நிரந்தர கணக்கு எண்ணின் (PAN கார்டு) சுயசான்றளிக்கப்பட்ட நகல் ஏதேனும் இருந்தால்
4. பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின்படி, குடியுரிமை பெறாத பங்குதாரரால் நன்மை பயக்கும் உரிமையின் சுய அறிவிப்பு.

பயனளிக்கும் வரி ஒப்பந்த விகிதத்தைப் பயன்படுத்துதல் உட்பட, மேற்கூறிய ஆவணங்களின் பரிசீலனையானது, பங்குதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய ஆவணங்களின் போதுமான தன்மை மற்றும் முழுமையைப் பொறுத்தது மற்றும் நிறுவனத்தின் திருப்திக்காக அதை மறுபரிசீலனை செய்தல்.

அதன்படி, பொருத்தமான TDS/தடுப்பு வரி விகிதத்தைத் தீர்மானிக்க எங்களுக்கு உதவ, மேலே குறிப்பிட்டுள்ளபடி இந்த விவரங்கள் மற்றும் ஆவணங்களை 4 ஆகஸ்ட் 2024 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- 2023–24 ஈவுத்தொகைக்காக நிறுவனத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரி ஒப்பந்த விகிதத்தின் பலனைப் பெறுவதற்கான வரி விலக்கு படிவங்கள் அல்லது ஆவணங்கள் இந்த இடைக்கால ஈவுத்தொகைக்கு பொருத்தமானதாகக் கருதப்படாது; அத்தகைய பலன்களைப் பெறுவதற்கு புதிய படிவங்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- மேற்கூறிய ஆவணங்கள் இல்லாத நிலையில் அல்லது தாமதமாகப் பெறப்பட்டதன் காரணமாக ஈவுத்தொகை மீதான குறைந்த வரியின் பலனை நிறுவனத்தால் வழங்க முடியாது. பங்குதாரர்கள் தங்களின் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யும்போது, தகுதியுடையவர்களாக இருந்தால், உரிய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான விருப்பம் இன்னும் இருக்கும். ஒருமுறை கழிக்கப்பட்ட வரிகளுக்காக நிறுவனத்திற்கு எதிராக எந்தக் கோரிக்கையும் இல்லை.

விதி 37BA இன் கீழ் நன்மை:

பதிவு தேதியின்படி பதிவு செய்யப்பட்ட பங்குதாரரைத் தவிர, ஈவுத்தொகை வருமானம் ஒரு நபருக்கு வரி விதிக்கப்படலாம். பதிவு செய்யப்பட்ட பங்குதாரர் TDS கிரெடிட் வழங்கப்பட வேண்டிய நபரின் பெயர், முகவரி, PAN மற்றும் அத்தகைய நபருக்கு TDS கிரெடிட் வழங்குவதற்கான காரணங்களைக் கொண்ட ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும்.

கிளியரிங் உறுப்பினர்கள் / இடைத்தரகர்கள் / பங்குத் தரகர்கள் பங்குகளை வைத்திருந்தால், மற்றும் TDS–ஐ நிறுவனம் பயனளிக்கும் பங்குதாரர்களின் PANல் விண்ணப்பிக்க வேண்டும் என்றால் இடைத்தரகர்கள் / பங்கு தரகர்கள் அல்லது மற்றவர்கள் மற்றும் ஆதாய பங்குதாரர்கள் ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும். அறிவிப்பின் வடிவம் லிங்க் https://www.integratedregistry.in/TaxExemptionRegistration.aspxல் உள்ளது. இந்த அறிவிப்பு, 4 ஆகஸ்ட் 2024 அன்று அல்லது அதற்கு முன், அதாவது, பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் RTAக்கு குறிப்பிடப்பட்ட இணைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 3 நாட்களுக்குப் பிறகு எந்த அறிவிப்பும் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வருமான வரிச் சட்டம், 1961ன் கீழ் புதிய விதிகளின்படி, வரி கழிக்கப்பட வேண்டிய ஆண்டிற்கு தொடர்புடைய உடனடியாக முந்தைய ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கை அவர்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஒரு நபருக்கு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டில் மொத்த TDS / டிசிஎஸ் கிரெடிட் ரூ.50,000/– அல்லது அதற்கு மேல் இருந்தால் (பிரிவு 206AB) ஜூலை 1, 2021 முதல் அதிக TDS விகிதம் விதிக்கப்படும்.

இந்தப் புதிய பிரிவிற்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்காததற்காக, பின்வரும் கட்டணங்களில் அதிகமாக TDS கழிக்கப்பட வேண்டும்.

a. பொருந்தக்கூடிய சட்டவிதிகளின்படி குறிப்பிட்டுள்ள விகிதத்தில் இருமடங்கு; அல்லது
b. நடைமுறையில் உள்ள விகிதங்கள் அல்லது விகிதங்களை விட இரு மடங்கு; அல்லது
c. 5% விகிதத்தில்

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, பிரிவு 206AB & 206CCAன்படி ஒருவர் "குறிப்பிட்ட நபரா" என்பதைச் சரிபார்க்க வரிக் கழிப்பாளர்கள் / சேகரிப்பாளர்களுக்கு வசதியாக "பிரிவு 206AB & 206CCAக்கான இணக்கச் சரிபார்ப்பு" என்ற புதிய செயல்பாட்டை வருமான வரித் துறை எளிதாக்கியுள்ளது. நிறுவனம் உங்கள் PAN எண்ணைப் பயன்படுத்தி இணக்கச் சரிபார்ப்பைச் செய்து, மேலே உள்ள விதிமுறைகள் இணங்கவில்லை என்று கண்டறியப்பட்டால் அதிக விகிதத்தில் வரியைக் கழிக்கும்".

பிரிவு 206AB(3)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி "குறிப்பிடப்பட்ட நபர்" என்பவர், பின்வருவனவற்றைக் கொண்டவர்:

(a) வரி கழிக்கப்பட வேண்டிய முந்தைய ஆண்டிற்கு முந்தைய ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கை உடனடியாக தாக்கல் செய்யவில்லை,சட்டப் பிரிவு 139(1)ன் கீழ் வருமான வரி தாக்கல் செய்வதற்கான காலக்கெடு முடிந்துவிட்டது; மற்றும்
(b) முந்தைய ஆண்டில் TDS மற்றும் TCS ஆகியவற்றின் மொத்த தொகை 50,000 அல்லது அதற்கும் அதிகமாக இருந்தால்

இந்தியாவில் நிரந்தர ஸ்தாபனம் இல்லாத குடியுரிமை பெறாத பங்குதாரர்கள் "குறிப்பிட்ட நபரின்" வரம்பிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

SEBI, நவம்பர் 03, 2021 தேதியிட்ட சுற்றறிக்கையில் (பின்னர் டிசம்பர் 14, 2021, மார்ச் 16, 2023 மற்றும் நவம்பர் 17, 2023 தேதியிட்ட சுற்றறிக்கைகளால் திருத்தப்பட்டது) பங்குகளை வைத்திருப்பவர்களின் (காகித வடிவத்தில் பத்திரங்களை வைத்திருக்க வேண்டும்) யாருடைய ஃபோலியோவில் (கள்) PAN அல்லது தொடர்பு விவரங்கள் அல்லது மொபைல் எண் அல்லது வங்கி கணக்கு விவரங்கள் அல்லது புதுப்பிக்கப்பட்ட மாதிரி கையொப்பம் ஆகியவற்றை கட்டாயமாக்கி உள்ளது. அத்தகைய ஃபோலியோக்கள் தொடர்பான ஈவுத்தொகை, வட்டி அல்லது மீட்பு உட்பட எந்தவொரு கட்டணமும் ஏப்ரல் 01, 2024 முதல் மின்னணு முறையில் மட்டுமே செலுத்தப்படும்.

எனவே, காகித போலியோக்களில் PAN அல்லது தொடர்பு விவரங்கள் அல்லது மொபைல் எண் அல்லது வங்கிக் கணக்கு விவரங்கள் அல்லது தொடர்பான மாதிரி கையொப்பம் புதுப்பிக்கப்படாவிட்டால், ஈவுத்தொகை/வட்டி போன்றவை. மேற்கூறிய அனைத்து விவரங்களையும் முழுமையாக அளித்தவுடன் ஏப்ரல் 01, 2024 முதல் மின்னணு முறையில் மட்டுமே செலுத்தப்படும்.

www.esabindia.com என்ற நிறுவனத்தின் இணையதளத்தில் தகவல் கிடைக்கும்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவின்படி
ஈசாப் இந்தியா லிமிடெட்டிற்காக
ஜி பாலாஜி
நிறுவன செயலாளர்

இடம்: சென்னை
தேதி: 12 ஜூலை, 2024

SHRIRAM FINANCE LIMITED

MARAIMALAINAGAR BRANCH VEHICLE FOR SALE

S.NO.	VEH.NO.	MAKE	MODEL
1.	TN22DD1587	G M TAVERA-P	2016

CONTACT: ARASU.J 9994316501

காணவில்லை

நான் ஜெரால்டு ஆரோக்கியம் (வயது 59) S/o. திரு. ஆரோக்கியம் (லேட்) எண்.7–S கார்டனியா, 94/1AB, புளூ பீச் ரோடு, நீலாங்கரை, சென்னை 600115 முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 16–06–2024ம் தேதி மதியம் 1.30 மணியளவில் எண் 7–S கார்டனியா, 94/1AB, புளூ பீச் ரோடு, நீலாங்கரை, சென்னை–600115ல் உள்ள வீட்டை மறுசீரமைப்பு செய்த போது ஆவண எண் 1633/2001 முகையூர் கிராமம், செய்யூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். செய்யூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு எனது வசம் இருந்த வீட்டு மனை அசல் ஆவணத்தை தேடிய போது காணவில்லை. யாரேனும் இந்த ஆவணத்தை கண்டெடுத்தால் தயவு செய்து கீழ் காணும் தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும் 91 98410 18114

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு.வி.பாஸ்கரன், த/பெ. விஸ்வநாத நாடார், பிளாட் எண்.209, பார்ம்ஸ் பிளாக், அலையன்ஸ் அபார்மெண்ட், வாட்டர் கெனால் ரோடு, கொரட்டூர் வடக்கு, சென்னை – 600 076 –ல் வசிக்கிறார். அவருடைய அறிவுறுத்தலின் பேரில் நான் இந்த பொது அறிவிப்பை வெளியிடுகிறேன். கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் ஒரிஜினல் ஆவணங்களை தனது மேலே கூறப்பட்ட வீட்டில் நீண்டகாலமாக வைத்திருந்தார், இப்போது தீவிர தேடலுக்குப் பிறகும் எந்த தடயமும் இல்லாமல் அவை காணாமல் போயின.

1. விற்பனை பத்திரம் எண்: 587/94 dt. 25.08.94, 2. விற்பனை பத்திரம் எண்: 104/95 dt. 20.02.95, 3. விற்பனை பத்திரம் எண்: 105/95 dt. 20.02.95, 4. விற்பனை பத்திரம் எண்: 106/95 dt. 20.02.95, 5. விற்பனை பத்திரம் எண்: 359/95 dt.19.05.95, 6. விற்பனை பத்திரம் எண்: 132/96 dt. 14.02.96 7. விற்பனை பத்திரம் (சீர்திருத்தல் பத்திரம்) எண்: 89/02 dt. 31.01.02.

மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் தென்காசியில் உள்ள சப்–ரிஜிஸ்டர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவையாகும். மேற் கூறிய அசல் பத்திரங்கள் யாருக்காவது கிடைத்தால் அவற்றை என்னிடமோ அல்லது எனது கட்சிக்காரரிடமோ ஒப்படைக்குமாறு இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஜி.ஜெய்சங்கர் ஸ்ரீனிவாசன், M.A.B.L
வழக்கறிஞர், பதிவு எண். MS 887/88: Door No.23/8D, 3–வது தெரு,
வெல்கம் காலனி, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னை–600 101

---

quintegra

க்விண்டெக்ரா சொலூஷன்ஸ் லிமிடெட்

CIN: L52599TN1994PLC026867

பதிவு அலுவலகம்: வெஸ்கோர் டவர்ஸ், 3வது தளம், 16, செனடாப் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை 600 018.
Ph: +91-44 -24328395 E-mail: investors @quintgrasolutions.com

அறிவிப்பு

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள கம்பெனியின் 30வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) புதன்கிழமை, 14 ஆகஸ்ட் 2024 அன்று காலை 10.00 மணிக்கு காணொலி காட்சி (''VC வசதி'')/இதர ஆடியோ காட்சி முறை (''OAVM'') மூலம் நடத்தப்படும்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, மார்ச் 31, 2024 நிலவரப்படி இருப்புநிலை அடங்கிய ஆண்டு அறிக்கை, அந்த தேதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி மற்றும் இயக்குநர்கள் / தணிக்கையாளர்கள் (ஒருங்கிணைந்த அறிக்கை) அறிக்கைகள் ஏற்கனவே மின்னணு முறையில் வைப்பு பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கையின்படி, ஒருங்கிணைந்த அறிக்கையின் காகித நகல்களை அனுப்புவது கைவிடப்பட்டது.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் அதன் கீழுள்ள பொருந்தக்கூடிய விதிகளின்படி, வருடாந்திர பொதுக்கூட்டத்தையொட்டி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் வியாழக்கிழமை, 8 ஆகஸ்ட் 2024 முதல் புதன்கிழமை 14 ஆகஸ்ட் 2024 அன்று வரை (இரு நாட்களும் உள்பட) மூடப்பட்டிருக்கும்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் உள்ள அனைத்து அலுவல்களும் மின்னணு வாக்களிப்பு மூலம் பரிவர்த்தனை செய்யப்படலாம். VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வழிமுறைகள், வருடாந்திர பொதுக்கூட்டத்துக்கு முன் தொலைதூர மின்னணு வாக்களிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பதற்கான வழிமுறைகள், காகித வடிவத்தில் பங்குகள் வைத்திருக்கும் உறுப்பினர்கள் அல்லது கம்பெனியில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள், கூட்டத்தின்போது தொலைதூர மின்–வாக்களிப்பு அல்லது மின்–வாக்களிப்பு முறை மூலம் வாக்களிப்பதற்கான முறை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

கட்ஆப் தேதியான 7 ஆகஸ்ட் 2024 அன்று உறுப்பினர்கள் வைத்திருக்கும் பங்குகளின் விகிதத்தில் வாக்களிக்கும் உரிமை இருக்கும்.

உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்குவதற்காக சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) சேவைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. மின்னணு வாக்களிப்பு செயல்முறையை ஆராய்வதற்காக M/s. ரெங்கராஜன் அண்ட் அசோசியேட்ஸ் (முன்னர் அருப் & அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள் ஆராய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மின்னணு வாக்குப்பதிவு சனிக்கிழமை 10 ஆகஸ்ட் 2024 அன்று இந்திய நேரப்படி காலை 9.00 மணிக்கு துவங்கி செவ்வாய்க்கிழமை, 13 ஆகஸ்ட் 2024 அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்களிப்பு முறை CDSL–ஆல் நிறுத்தப்படும்.

மின்னணுவாக்குப்பதிவில் கேள்விகள்/குறைகள்இருந்தால் தொடர்பு கொள்ளவும்:

இன்டகிரேட்ட் ரெஜிஸ்ட்ரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் கென்சஸ் டவர்ஸ், 2 வது மாடி, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600 017. தொலைபேசி: +91 44 2814 0801 மின்னஞ்சல்: : yuvraj@integratedindia.in	**சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்** பிரோஸ் ஜீஜீ பாய் டவர்ஸ், 17வது தளம், தலால் தெரு, மும்பை 400 001 தொலைபேசி : 91–22–2272 3333 – 3224 மின்னஞ்சல் helpdesk.evoting@cdslindia.com

குழு உத்தரவுப்படி
க்விண்டெக்ரா சொலூஷன்ஸ் லிமிடெட்டுக்காக
V. ஸ்ரீராமன்
முழுநேர இயக்குனர்

இடம்: சென்னை
தேதி : 12 ஜூலை 2024

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB

CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை,
சென்னை- 600 058. தொ.பேசி எண். 044-4228 1100 இ-மெயில்: investor.relations@esab.co.in

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

ஏ) பின்வரும் அலுவல்களை பரிவர்த்தனை செய்ய நிறுவன பங்குதாரர்களின் முப்பத்தி ஏழாவது (37வது) வருடாந்திர பொதுக்கூட்டம் ('AGM') வியாழக்கிழமை, 8 ஆகஸ்ட் 2024 அன்று மாலை 3.30 மணிக்கு காணொளி காட்சி (VC) / பிற ஒலி ஒளி வழிமுறைகள் (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

1. 31 மார்ச் 2024 வரை தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை மற்றும் அந்த தேதியில் முடிவடைந்த நிதியாண்டிற்கான லாபம் மற்றும் நஷ்டக் கணக்கு அறிக்கை, இயக்குநர்கள் மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கைகளை பரிசீலித்தல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் அங்கீகரிக்கத்தல்.
2. ஒவ்வொன்றும் ரூ.10/– மதிப்புள்ள சமபங்கிற்கு இறுதி ஈவுத்தொகையாக ரூ.30/– அதாவது, 300% அறிவித்தல்.
3. இயக்குனர் அடையாள எண் 00261434 கொண்ட திரு. B. மோகன் அவர்களுக்கு பதிலாக ஒரு இயக்குனரை நியமித்தல். சுழற்சி முறையில் ஓய்வு பெறும் அவர் மீண்டும் நியமனம் பெற தகுதியுடையவர் ஆவார்.
4. M/s. டெலாய்ட் ஹாஸ்கின்ஸ் & செல்ஸ், சார்ட்டட் அக்கவுண்டன்ட்ஸ், சென்னை நிறுவனத்தை, நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களாக நியமித்தல், நிறுவனத்தின் 37வது வருடாந்திர பொதுக்கூட்டம் முடிவடைந்ததிலிருந்து நிறுவனத்தின் 42வது வருடாந்திர பொதுக் கூட்டம் முடியும் வரை 5 (ஐந்து) ஆண்டுகள் பதவியில் நியமித்தல் மற்றும் அவர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவிடம் ஒப்புதல் பெறுதல்.
5. செலவுத் தணிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு அங்கீகாரம் அளித்தல்.
6. ஈசாப் யூரோப் Gmbh, சுவிட்சர்லாந்து, தொடர்புடைய பார்ட்டியுடன் பொருள் பரிவர்த்தனைகளை அங்கீகரித்தல்
7. EWAC அலாய்ஸ் லிமிடெட், இந்தியா, தொடர்புடைய பார்ட்டியுடன் பொருள் பரிவர்த்தனைகளை அங்கீகரித்தல்.

25 செப்டம்பர் 2023 தேதியிட்ட MCA சுற்றறிக்கை எண்: 09/2023க்கு இணங்க, 5 ஜூலை 2024 அன்று உறுப்பினர்களாக இருந்த உறுப்பினர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு 2023–24ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு வெள்ளிக்கிழமை, 12 ஜூலை 2024 அன்று மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையின் காகித நகல்களை குறிப்பாக கோரும் பங்குதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

37வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை மற்றும் மின் வாக்களிப்பிற்கான வழிமுறைகள் நிறுவனத்தின் இணையதளத்தில் கிடைக்கும்: www.esabindia.com. வருடாந்திர அறிக்கையைப் பெறாத உறுப்பினர்கள், நிறுவனத்தின் இணையதளம் மற்றும் பங்குச் சந்தை இணையதளம் BSE லிமிடெட் www.bseindia.com மற்றும் தி நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் www.nseindia.com மற்றும் என்எஸ்டிஎல் இணையதளம் www.evoting.nsdl.comலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

23 மே, 2024 தேதியிட்ட வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல் வாக்களிப்பதன் மூலம் பரிவர்த்தனை செய்யப்படலாம்:

I) தொலைதூர மின்–வாக்களிப்பு – நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 108, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014ன் விதி 20 மற்றும் செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (SEBI)யின் பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள் (LODR), விதிமுறைகள், 2015ன் விதி 44க்கு இணங்க

தொலைதூர மின்–வாக்களிப்பு காலம் திங்கட்கிழமை, 5 ஆகஸ்ட் 2024 அன்று காலை 9:00 மணிக்குத் தொடங்கி புதன்கிழமை, 7 ஆகஸ்ட் 2024 அன்று மாலை 5:00 மணிக்கு முடிவடைகிறது.

மேற்கூறிய தேதி மற்றும் வாக்களிக்கும் நேரத்திற்குப் பிறகு தொலைதூர மின்–வாக்களிப்பு NSDLஆல் முடக்கப்படும் மற்றும் ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்தவுடன், உறுப்பினர் அதை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

II) மின்–வாக்களிப்பு: காணொளி காட்சி (VC) / பிற ஒலி ஒளி வழிமுறைகள் (OAVM) மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர மின்–வாக்களிப்பு மூலம் ஏற்கனவே வாக்களிக்காதவர்கள், வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும்போது மற்றும் 8 ஆகஸ்ட் 2024 அன்று முடியும் வரை மின்–வாக்களிப்பு மூலம் தங்கள் வாக்கைப் பதிவு செய்யலாம்.

தொலைதூர மின்–வாக்களிப்பு மூலம் ஏற்கனவே வாக்களித்த உறுப்பினர்கள் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள், ஆனால் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

கட்ஆப் தேதியில் அதாவது, வியாழக்கிழமை 1 ஆகஸ்ட் 2024 அன்று காகித அல்லது டிமெட்டீரியலைஸ்டு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், என்எஸ்டிஎல்–லின் மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களில் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆப் தேதியான வியாழக்கிழமை, 1 ஆகஸ்ட் 2024 அன்று பங்குகளை வைத்திருக்கும் எவரும் evoting@nsdl.co.inக்கு கோரிக்கை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை பெறலாம். எவ்வாறாயினும், ஒரு நபர் ஏற்கனவே என்எஸ்டிஎல்–ல் மின்னணு வாக்குப்பதிவுக்காக பதிவு செய்திருந்தால், ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை வாக்களிக்கப் பயன்படுத்தலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தின் மின்னணு வாக்குப்பதிவு மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு ஆகியவற்றின் முடிவுகள் 10 ஆகஸ்ட் 2024 அன்று அல்லது அதற்கு முன் பங்குச் சந்தைகளுக்கு அறிவிக்கப்படும். ஆராய்வாளர் அறிக்கையுடன் அறிவிக்கப்பட்ட முடிவுகள் நிறுவனத்தின் இணையதளம் www.esabindia.comல் வைக்கப்படும் மற்றும் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் வைக்கப்படும்.

பி) புத்தக மூடல்:

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 91 மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014ன் விதி 10(1) மற்றும் செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (SEBI) பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள் (LODR), விதிமுறைகள், 2015ன் விதி 42ன்படி, வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் இறுதி ஈவுத்தொகை நோக்கத்திற்காக உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் வெள்ளிக்கிழமை, 2 ஆகஸ்ட் 2024 முதல் வியாழக்கிழமை, 8 ஆகஸ்ட் 2024 வரை (இரண்டு நாட்களையும் உள்ளடக்கி) மூடப்பட்டிருக்கும்.

சி) ஆய்வு செய்பவர்:

வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கான தொலைதூர மின்–வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக சிஎஸ் வி மகேஷ், வி மகேஷ் அண்ட் அசோசியேட்ஸ், பயிற்சி நிறுவன செயலாளர்கள், 12/22, 7வது பிரதான சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை 600 028 அவர்களை இயக்குனர்கள் குழு நியமித்துள்ளது. மற்றும் அத்தகைய நியமனத்திற்கான தனது விருப்பத்தை அவர் தெரிவித்திருக்கிறார், மேலும் அதே நோக்கத்திற்காக அவர் செயல்படுவார்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவின்படி
ஈசாப் இந்தியா லிமிடெட்
ஜி.பாலாஜி
நிறுவனச் செயலர்

சென்னை
12 ஜூலை, 2024